ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

जातिर्यातु रसातलं गुणगणस्तत्राप्यधोगच्छतां
शीलं शैलतटात्पतत्वभिजनस्सन्दह्यतां वह्निना ।
शौर्ये वैरिणि वज्रमाशु निपतत्वर्थोऽस्तु नः केवलं
येनैकेन विना गुणास्तृणलवप्रायास्समस्ता इमे ॥ भर्तृहरिः ॥

ஜாதிர்யாது ரஸாதலம் குணகணஸ்தத்ராப்யதோகச்சதாம்
ஶீலம் ஶைலதடாத்பதத்வபிஜநஸ்ஸந்தஹ்யதாம் வஹ்நிநா ।
ஶௌர்யே வைரிணி வஜ்ரமாஶு நிபதத்வர்தோऽஸ்து ந: கேவலம்
யேநைகேந விநா குணாஸ்த்ருணலவப்ராயாஸ்ஸமஸ்தா இமே ।

ஜாதி:— பிராமணத்வம் முதலான ஜாதியானது பாதாளலோகத்தையடையட்டும் அதாவது முற்றிலும் கீழேபோய்விடட்டும். அதற்குறிய சிறந்தகுணஸமூகமும் பாதாளலோகத்திற்கும் கீழ்போகட்டும். உத்தமமான ஸ்வபாவமானது மலையிலிருந்து விழுந்து ஒன்றுமில்லாமல் சிதரிப்போகட்டும். தம் குலமானது அகனியால் தகிக்கப்படட்டும். சத்ருபோல்மனத்துக்குக் கலக்கத்தையுண்டுபண்ணுகின்றதான சூரத்தன்மையிலிடிவிழுந்து அதுவும் போகட்டும் எவ்விதமாகிலும் பொருளையடையவேண்டியதென்கிற இந்த ஒன்றுதான் நமக்கு முக்கியம். பொருளில்லாமல் இதர சிறந்தகுணங்கள் எவ்வளவிருப்பினும் அவையாவும் அற்பமான புல்லைப்போல் உபயோகமற்றவைகளாக ஆகின்றன.

எது இருந்தாலும் எதுபோனாலும் ஒன்றையும் நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. எப்படியாகிலும் தனத்தைச்சம்பாதிக்கவேண்டுமென்று அதில் அதிக ஆசைகொண்ட ஒருவருடைய மனப்பான்மை இவ்விதமிருக்குமென்று இங்கு காட்டப்பட்டிருக்கின்றது.

இதினால் இல்லறவாழ்க்கைக்குப் பொருளைத் தேடவேண்டியது அவசியமாயிருந்தாலும் தம்ஜாதி, குலதர்மம், தமக்கிருக்கவேண்டிய குணங்கள், பாபம், புண்யம், மற்றுமுள்ள சிலதர்மங்கள் இவைகளை ஒன்றையும் கவனிக்காமல் பூருவாகத்தள்ளிவிட்டு எவ்விதக் கெட்டகாரியங்களைச் செய்தாவது திரவிய ஸம்பாதனம் செய்வதே பெரிதென்று கருதாமல் அவரவர்களுக்கேற்பட்ட தர்மங்களைக் கைவிடாமல் நியாயமார்க்கத்திலிருந்துகொண்டு பொருளை ஆர்ஜநம்செய்ய விரும்பவேண்டுமென்றும் அதிகஆசைகொண்டு கெட்டவழிகளில் பிரவேசிக்கக்கூடாதென்றும் இதினால் அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# பதிவிரதாஸ்திரீகள் இருக்க வேண்டிய முறை

(164-வது பக்கத்தொடர்ச்சி)

अत्यालापमसन्तोषं परव्यापारसङ्गतम् ।
अतिहासातिरोषौ च क्रोधस्थानं च वर्जयेत् ॥
यच्च भर्ता न पिबति यच्च भर्ता न खादति ।
यच्च भर्ता न चाश्नाति सर्वं तद्वर्जयेत्सती ॥

அத்யாலாபமஸந்தோஷம் பரவ்யாபாரஸங்கதம் ।
அதிஹாஸாதிரோஷௌ ச க்ரோதஸ்தாநம் ச வர்ஜயேத் ॥
யச்ச பர்தா ந பிபதி யச்ச பர்தா ந காததி ।
யச்ச பர்தா ந சாச்நாதி ஸர்வம் தத்வர்ஜயேத்ஸதீ ॥

அதிக வார்த்தைபேசுவது, ஸந்தோஷமில்லாமலிருப்பது, பிறருடைகார்யங்களில் ஸம்பந்தப்படுவது, அதிகச்சிரிப்பு, அதிகக்கோபம், கோபத்திற்கு ஸ்தானமானகாரியம் இவைகளை விலக்கவேண்டும். பின்னும்பர்த்தா எதைக்குடிக்கவில்லையோ எதைச்சாப்பிடவில்லையோ எந்தபோஜனத்தைச் செய்யவில்லையோ அவைகளைப் பூராவாக விலக்கவேண்டும்.

तैलाभ्यङ्गं तथा स्नानं शरीरोद्वर्तनक्रियाम् ।
मार्जनं चैव दन्तानामलकानां च कर्तनम् ॥
भोजनं वमनं निद्रां परिधानं च वाससाम् ।
प्रारम्भं मण्डनानां च न कुर्यात्पश्यति प्रिये ॥

𑌤𑍈𑌲𑌾𑌭𑍍𑌯𑌙𑍍𑌗𑌂 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌶𑌰𑍀𑌰𑍋𑌦𑍍𑌵𑌰𑍍𑌤𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 ।
𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍇𑌶𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌨𑌮𑍍 ॥
𑌭𑍋𑌜𑌨𑌂 𑌵𑌮𑌨𑌂 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂 𑌪𑌰𑌿𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌵𑌾𑌸𑌸𑌾𑌮𑍍 ।
𑌆𑌰𑌮𑍍𑌭𑌂 𑌮𑌣𑍍𑌡𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 ॥

எண்ணெய்தேய்த்துக்கொள்ளுகிறது ஸ்நாநம்செய்கிறது சரீரத்திற்கு அரப்பு முதலியதெய்த்துகொள்ளுகிறது பல் துலக்குவது கேசங்களை வாரிப் பின்னிக் கொள்ளுகிறது சாப்பிடுகிறது வமனம்செய்கிறது தூங்குகிறது வஸ்திரதாரணம் செய்துகொள்ளுகிறது அலங்காரம்செய்துகொள்ள ஆரம்பம் செய்கிறது இவைகளெல்லாம் தன் பதி பார்த்துக்கொண்டிருக்கும்போது செய்யக்கூடாது.

द्वारोपवेशनं नित्यं गवाक्षावेक्षणं तथा ।
असत्प्रलापो हास्यं च दूषणं कुलयोषिताम् ॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌪𑌵𑍇𑌶𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌗𑌵𑌾𑌕𑍍𑌷𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌥𑌾 ।
𑌅𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌲𑌾𑌪𑍋 𑌹𑌾𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍂𑌷𑌣𑌂 𑌕𑍁𑌲𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ॥

வீட்டுவாசற்படியில் உட்காருவது ஜன்னலின்வழியாகப்பார்ப்பது கெட்டவார்த்தையைப் பேசுவது கெட்டநடத்தையுடையவர்களுடன் பேசுவது சிறிப்பது இவைகள் இருந்தால் குடும்பஸ்திரீகளுக்கு தோஷத்தையுண்டுபண்ணுமாகையால் அவைகளை விலக்கவேண்டும்.

सकामं वीक्षिताप्यन्यैः प्रियैर्वाक्यैः प्रलोभिता ।
स्पृष्टा वा जनसम्मर्दे न विकारमुपैति या ॥
पुरुषं सेवते नान्यं मनोवाक्कायकर्मभिः ।
लोभितापि परेणार्थै सा सती लोकभूषणम् ॥

𑌸𑌕𑌾𑌮𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌲𑍋𑌭𑌿𑌤𑌾 ।
𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌾 𑌵𑌾 𑌜𑌨𑌸𑌮𑍍𑌮𑌰𑍍𑌦𑍇 𑌨 𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌯𑌾 ॥
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸𑍇𑌵𑌤𑍇 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌲𑍋𑌭𑌿𑌤𑌾𑌪𑌿 𑌪𑌰𑍇𑌣𑌾𑌰𑍍𑌥𑍈 𑌸𑌾 𑌸𑌤𑍀 𑌲𑍋𑌕𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥

இதரபுருஷனால் விருப்பத்துடன் பார்க்கப்பட்டாலும் பிரியமான வாக்கியங்களால் பிரலோபனம் செய்யப்பட்டாலும் ஜனக்கூட்டங்களில் சரீரத்தில் தொடப்பட்டாலும் ஒருவிதமான விகாரத்தையும் அடையாமல் மனம், வாக்கு, சரீரம் இவைகளால் வேறுபுருஷனை ஸேவிக்காமலிருப்பவள்தான் பதிவிரதையாவள் லோகத்திற்கும் அலங்காரமாயிருப்பள்,

दैन्येन प्रार्थितावापि बलेन विधृतापि वा ।
वस्त्राद्यैर्वासितावापि नैवान्यं भजते सती ॥
वीक्षिता वीक्षते नान्यं हसिता न हसत्यपि ।
भाषिता भाषते नैवं सा साध्वी साधुलक्षणा ॥

தைந்யேந ப்ரார்த்திதாவாபி பலேந வித்ருதாபி வா ।
வஸ்த்ராத்யைர்வாஸிதாவாபி நைவாந்யம் பஜதே ஸதீ ॥
வீக்ஷிதா வீக்ஷதே நாந்யம் ஹஸிதா ந ஹஸத்யபி ।
பாஷிதா பாஷதே நைவம் ஸா ஸாத்வீ ஸாதுலக்ஷணா ॥

எந்த ஸ்திரீயானவள் பரபுருஷனால் தைந்யத்துடன் பிரார்த்திக்கப்பட்டாலும் பலாத்காரமாக கிரகிக்கப்பட்டாலும் சிறந்த ஆடை ஆபரணங்கள் கொடுக்கப்பட்டாலும் அவனை அடையாமலிருக்கிறாளோ அவள் பதிவிரதையாகிறாள். பின்னும் உத்தமகுணமுடைய பதிவிரதையானவள் இதரபுருஷனால் பார்க்கப்பட்டாலும் தான் அவனைப்பார்க்கமாட்டாள். அவன் சிரித்தாலும் இவள் சிரிக்கமாட்டாள், எதாகிலும் வார்த்தைசொன்னாலும் இவள் சொல்லமாட்டாள் என்று வியாஸர் கூறுகிறார்.

नानुक्ता गृहान्निर्गच्छेत् । नानुत्तरीया ।

நாநுக்தா க்ருஹாந்நிர்கச்சேத் । நாநுத்தரீயா ।

வீட்டிலுள்ள பெரியோர்களின் உத்திரவின்றியும் மேல்வஸ்திரம் இல்லாமலும் வெளியில் போகக்கூடாது न त्वरितं व्रजेत् ந த்வரிதம் வ்ரஜேத் வேகமாக நடக்கக்கூடாது

परपुरुषमभिभाषेत नान्यत्र वणिक्प्रव्रजितवृद्धवैद्येभ्यः ।

பரபுருஷம் அபிபாஷேத நாந்யத்ர வணிக்ப்ரவ்ரஜித வ்ருத்தவைத்யேப்ய: ।
வியாபாரி ஸந்யாஸி வயதுசென்ற இவர்களைத்தவிர இதரபுருஷர்களிடம் பேசக்கூடாது न नाभिं दर्शयेत् ந நாபிம் தர்ஶயேத் தொப்பிளை வெளியில் காண்பிக்கக்கூடாது. आगुल्फाद्वासः परिदध्यात् ஆகுல்பாத்வாஸ: பரிதத்யாத் குதிகால் பரியந்தம் வஸ்திரத்தை மறைத்துக்கட்டிக்கொள்ளவேணும். न स्तनौ विवृतौ कुर्यात् ந ஸ்தநௌ விவ்ருதௌ குர்யாத் ஸ்தனங்களை மூடிக்கொண்டே இருக்கவேண்டும். न हसेत् ந ஹஸேத் சிரிப்புக்கூடாது. भर्तारं तद्बन्धून्वा न द्विष्यात् பர்தாரம் தத்பந்தூந்வா ந த்விஷ்யாத் । பதியிடமும் அவன் பந்துக்களிடமும் விரோதம் கூடாது.

உபபத்திராதிபர்.

---

# தர்மசாஸ்திரத்தின் மஹிமை

(660-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகையால் எங்கு ஒரு தர்மத்திற்கு விரோதமாய் மற்றொரு தர்மம் வருகிறதோ அங்கு எதை அனுஷ்டிப்பதென்ற விஷயத்தில் முற்கூறியவாறே பெரிது சிறிதென்ற கௌரவத்தைச் சீர்தூக்கிப்பெரிதையே தர்மமெனக்கொள்ளல்வேண்டும் என்கிறார் வஸிஷ்டர். சுருதிஸ்மிருதி இவைகளால் விதிக்கப் பெற்றதே தர்மம். இவ்விரண்டுமில்லாவிடத்து சிஷ்டாசாரமென்றார். சிஷ்டாசாரமென்பதை முன்னமே கூறினும் மீண்டும் மறவாமைக்காகச் சுருக்கிக் கூறுகின்றேன். பொறுமை முதலிய நற்குணமில்லாமல் வேதசாஸ்திரத்தையே சரணமடைந்து அதன்வழி விட்டகலாது நிற்பவர்களே சிஷ்டர்கள்: இனி சிஷ்டாசாரம் இருவகையாய் இருந்தால் அங்கு என் செய்வதென்றால் கூறுவாம்.

எந்த தேசத்தில் எந்தக்காலத்தில் எந்த மகானிடத்தில் ராகம் த்வேஷம் இல்லாமலிருப்பதை விசேஷமாய்க் கண்டதால் கௌரவபுத்தி அதிகரித்ததோ அம்மகானது ஆசாரத்தைக்

கொள்ளல் வேண்டுமென்றார். இவ்வபிப்பிராயத்தையே தைத்தரீயோபநிடதம் விளக்கிக் கூறியிருக்கிறது. அங்கு மகான்களுக்கு இலக்கணமாகச் சிற்சில அடைமொழிகள்கொடுப்பட்டிருக்கின்றன-ஸம்மர்சிகள் யுக்தர்கள் ஆயுக்தர்கள் அலூக்ஷர்கள் தர்மகாமர்கள் என்று. ஸம்மர்சிகளென்றால் யுக்தியால் இந்தக்கன்மத்திற்கு இம்மையிற் ப்ரத்யக்ஷபலன் உள்ளது என்றும் இது மறுமையிற் பயனுள்ளதென்றும் ஆர அமர ஆராய்ந்து நிச்சயித்து அனுஷ்டானம் செய்பவர்களென்றும். யுக்தர்களென்றால் வேத சாஸ்திரங்களுக்கு விரோதமில்லா யுக்தியுள்ளவர்களாய் சாஸ்திரானுஷ்டானம் செய்பவர்களென்றும், ஆயுக்தர்களென்றால் அனுஷ்டானம் செய்தும் நடத்தியும் வைப்பவர்களென்றும், அலூக்ஷர்களென்றால் கோபம் லோபம் முதலிய துர்குணமற்றவர்களென்றும், தர்மகாமர்களென்றால் ஜீவன் முக்தர்கள் போல் தர்மானுஷ்டானத்தை விட்டவர்களாய் ஆகாமல் அதில் மிகப்பக்ஷமுள்ளவர்களென்றும் அர்த்தம். ஆகவே இத்தகையமகான்கள் இக்காலத்தில் எத்துணை பெயர்களிருப்பார்கள். மருந்துக்காவது கிடைக்குமோ இல்லவே இல்லை. ஆதல் பற்றியே இத்தகைய மகான்களால் வகுத்துவரையப்பட்டிருக்கும் தர்மலக்ஷணவரம்பை இத்தகைய மகான்கள் வந்து மாற்றுகிற வரை நாம் இதை அனுஷ்டிக்கத்தான் வேண்டுமே தவிற அதைத் தொடவே கூடாது. இதன் உண்மையை யறியாத இக்காலத்திய மேதாவிகள் தர்மம் காலத்திற்கேற்றவாறு மாறுமென்றும் அதை இக்காலத்திற்குத் தக்கவாறு மாற்றலாமென்றும் கூறுவது ஸிம்மமில்லாக் காட்டில் நரி ஊளையிடுவதையொக்கும். இது நமக்குப் பிரகிருதமில்லை. இனிவழியைப்பற்றுவோம். ஆகவே தைத்ரீயோபநிடதம் கூறின இவ்வழியையே நம்மகரிஷிகள் பின்பற்றினும் சிற்சிலவிடங்களில் போதாயனர் ஆபஸ்தம்பர் முதலியவர்கள் பேதமாய் அனுஷ்டிக்க நேர்ந்தாலும் அவரவர்களைப் பின்பற்றியவர்கள் அவரவர் அனுஷ்டானத்தை அவரிடத்தில் வைத்தகௌரவத்தைக்கொண்டு அனுஷ்டித்துக் கிருதார்தர்களானார்கள். ஆகவும் ஆகிறார்கள். ஆனால் ஒருவர்து அனுஷ்டானத்தை அனுஷ்டித்தால் மற்றவரை இகழ்வதல்ல. ஆகையால் தான் ஒருவரது அனுஷ்டானத்தையே அனுஷ்டிக்கும்ஒருவருக்கு அவ்வனுஷ்டானக் கிரமம் கிடைக்காவிடின் இன்னொரு மகரிஷி சொன்னதை பக்தியுடன் அனுஷ்டிப்பதுதான் முறையென்றுகொ

ண்டிருக்கிரேம். ஆகவே ஆஸ்திகர்கள் யாவரும் கீழ்க்கூறிய வாறு சுருதிஸ்மிருதிகளின் பலாபலத்தை நன்கு விசாரித்துக் கன் மாநுஷ்டானத்தை சரிவர நடத்தவேண்டும். இனி இவ்விதம் அத்புதமாய் தவத்தால் தர்மங்களைக் கண்டெழுதிவைத்த ஸ்மிருதி கர்த்தாக்களைப்பற்றிச் சற்றுவிசாரிப்பாம்.

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரியள்

---

விஷயதானம் செய்வோர்களின் அபிப்பிராம் பத்திராதிபர்களைச் சாரமாட்டா.

# பெரும் குடியை ஒழித்தல்.

பாரதகண்டத்திற் பிறந்தவர்களே! இவ்விஷயம் கொஞ்ச காலம் தொட்டு நம்மவர்களின் மனதில் உறுத்திக்கொண்டு மிகத் துன்பத்தைக் கொடுத்து வருகிறதென்பதை யாவருமறிவர். கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைச்சாப்பிட்டு வருவதால் குடி கெட்டுவிடுவதன்றியும் ஏராளமான நஷ்டமும் நம் தேசத்திற்கேற் பட்டு வருகிறதென்பதைப் பலவறிஞர் தேசபாஷைப் பத்திரிகைகளிலும உபன்யாஸமூலமும் கதறிவருகிரூர்கள். குடிப்பழக்கமுள்ள மனிதனைக் குடிவெறி இல்லாத சாமான்யகாலத்தில் கேட்டால்தான் அவ்விதம் செய்துவருவதால் தன் குடும்பத்திற்கு நேரும் கஷ்டங்களைப்பற்றி மனதுருகியே பேசுகிறுன். ஆனல் அவ்வேளை வந்துவிட்டால் கையில் காசும் கூடிவிட்டால் அவனை யறியாமலே கள்ளுக்கடையில் கொணடு நிறுத்தி விடுகிறது. அங்கு போனவுடன் தலை கால்புரியாது கைப்பணத்தையும் இன்னும் மிதமிஞ்சின பிரீதியால் தேகத்திலணிந்திருக்கும் கடுக்கன் மோதிரம் நல்ல வஸ்திரங்களையும் கடைக்காரனுக்கு ஒப்படைத்துவிட்டு வருகிறதும் இயற்கையே. இதனுல் நம் தேசத்திற்கு நேரும் அறியாத்தன்மையும் அளவிடத்தக்கதோ. அதிகமாய்வளர்ப்பானேன். அதனுல் கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வருமான வரி வருடத்திற்கு 50-லக்ஷம் ரூபாயாம். பாருங்கள் 50-லக்ஷம் வருமான வரியானுல் எத்துணை லக்ஷம்விற்பனையாகும். அவ்வளவு பணம் பாழாய் அழிந்துதானே போகிறது. இவ்வளவு பண அழி

வால் உலகில் நன்மையுண்டோ. இல்லை. தீயத்தொழிலும் கொலை களவும்தான் நாளுக்குநாள் மேலாகிறது. இத்தகைய அனியாயங்களை ஒழிப்பதற்காகவே தேச நன்மைக்குப் பாடுபடும் கனவான்கள் முயல்கின்கனர். இப்போதிய கலால மந்திரியும் கூடிய சீக்கிரம் முழுமையுமே இதை ஒழிககப் பாடு படுவதாயும் கூறுகின்றனர். இது நமக்கோர் நல்காலமே. ஆனால் இதைப்பற்றி புகழ்வதற்காக இங்கு நான் இறகு ஏந்தவில்லை. மற்று கெட்ட குடிப் பழக்கத்தை ஒழிப்பதற்கு மனமுருகிப் பாடுபடும் கனவானகள குடியர்களைப் பார்த்துப் படும் துயாத்தை முதலில் தன்னையும் தன் சுற்றியுள்ள படிப்பாளர்களையும் பார்த்துச்செலுத்துவதுடன் ஆர அமர ஆழ்ந்து ஆலோசித்துத் தங்கள் குடிப்பழக்கத்தையும் முதலில் நிறுததவேண்டும். அவ்விதம் படிபபாளர் செய்துகொண்டு படிப்பில்லாதவர்களிடம் கெஞ்சிக்கேட்டால் அவர்களும் உடனே தன் தோஷத்தை விலக்க முயற்சிப்பார்கள். இனி நம் குடி யாது. அதனால்வரும் கேடு யாது. அதனால் உலத்திற்கேற்பட்ட நஷ்டம் யாது என்றால் அதனை விரிப்பதே இங்கு எனது நோக்கமாதல்பற்றி அங்கு இறங்குகிறேன்.

நம் குடியாதென்றால் அது தான் படுக்கையை விட்டு எழுந்தவுடன் அருந்தும் காபி டீ முதலியவைகளின் பானம். இதனைச் சிலர் சிறு குடியென்பார். இது அறியாத்தனம். ஊன்றிப்பார்த்தால் இதுதான் பெருங்குடி என்பது இனி வரும் விஷயத்தாலே விளங்கும். இனி வரும் கேடென்னமென்பதைக் கவனியுங்கள் இதனால் வரும் கேட்டைச் சொல்லவேண்டுமோ. சொல்கிறேன் இப்பானம் காலையில் செய்வது நமது சாஸ்திரத்திற்கடுக்குமா, சாஸ்திரம் வேண்டாம். தன்வந்தரி முதலிய வைத்திய சாஸ்திரப் பிரவர்த்தகர் காலையில் ஒரு ஆகாரமும் உட்கொள்ளக்கூடாதென்றும் இரவில் உரக்கத்தால நாடிகள் தகைந்து நின்ற ரஸதாது ஓட்டங்களால் தேகத்தின் வெளியில் மலம் ரோமத்துவாரம் வழியாய் வெளியேறுகிறதென்றால் அதனால் ஏற்பட்ட அசுத்தத்தைக் காலையில் முழுகிப்போக்கவேண்டுமென்று விழித்ததுமுதல் நரம்புகளில் ஓட ஆரம்பிககும் அனனரஸம் கிரமமாய்ப் பககுவமாக 5 மணி நேரமாவது வேண்டுமென்றும் அப்போது பசிபோல் தோன்றுவது பசியல்லவென்றும் அவவேளையில் செய்யும் ஆகாரத்தால் நாடிகளின் வேகத்திற்குக் குறைவு ஏற்பட்டு அதனாற் பற்

பல வியாதியுண்டாகுமென்றும் விஸ்தாரமாய்க் கூறியிருக்கின்றனர். இப்பழம் சுவடியும் நமக்கு வேண்டாம். இக்காலத்திய வைத்திய நிபுணர்களான டாக்டர் யாராவது காபி சாப்பிடுவதால் நலமுண்டென்று சொல்ல முன் வந்தனரா. இப்போதும் முன்வருவாரா. இதனால் நமக்கு வரும் கேட்டைக் கவனியுங்கள். முற்கூறியபடி சாஸ்திரவிரோதம். இதனால் நீரிழிவு வியாதி ஏற்படுகிறது. எலும்புகளிலுள்ள மஜ்ஜை என்று கூறப்பெறும் நெய் போன்ற சத்தை உருஞ்சிவிடுகிறது. அதனால் எலும்புக்கு துர்பலம் வருவதென்றால் தேகத்திற்கு துர்பலம். பசியின்மை ஸந்தான விருத்திக் குறைவு மிக ஆவசியகமான பிதிருகாலத்திலும் அதை சாப்பிட வேண்டாமென்று நிறுத்தும் ஆஸ்திகனுக்குக்கர்மம் செய்யும்போது புத்தி ஸ்திரமில்லாமல் தத்தளிக்கிறான். தலைவலி வந்து விடுகிறதாம். அதனால் கர்மத்தில் அசிரத்தை ஏற்படுவதொடு நிற்காமல் இந்த எழவு தவசம் வருகிறதே. இதுதான இந்து மதத்தில் மனிதனைப் பற்றற்றதாய்ச்செய்கிறதென்று மதத்திற்கும் கன்மத்திற்கும் வசவு. இம்மட்டா, வர்ண தர்மங்களை அறவே உதறித்தள்ளிப் பயமின்றி லஜ்ஜையின்றி காப்பிக்கடையில் மனித ஜாதி ஒரே ஜாதியென்ற அத்வைத ஞானத்தோடு புகுந்து உல்லாஸமாய் ஆஸனத்திலமர்ந்து ஐயோ எச்சில் அசுத்தம ஒன்றையும் கொஞ்சமும் சட்டை செய்யாது மேஜையில்கொண்டு வந்து வைக்கும் ஆபாஸ ஆகாரத்தை உட்கொண்டு ஏப்பமிட்டுக் கைக்காசை சட்டைப் பை மணி பாக்ஸிலிருந்து தலைகீழாய்க் கொட்டி வெளியேறுகிறான்.

ஆனால் காபிக்கடையில் குடிக்காமல் தன்வீட்டிலேயே குடிக்கிறதனால் இத்தகைய கெடுதல் யாதொன்றுமில்லையோவெனில் அவ்விதம் குடிப்பவர்கள் 100-க்கு 5பேர்தான் இருக்கும். பெரும்பான்மையோரைப் பற்றித்தான் விசாரித்தறியவேண்டும். ஆனாலும் 5 பேர்களென்று சொல்பவர்களுக்குத் தோஷம் கூற முடியாதோவெனில் அவர்களிடம்தான் விசேஷக்கொலைபாதகம் நாஸ்திக்கியம் ஏற்படும் என்பதை பின்னால் அறியலாம். முதலாக காலை ஆகாரத்தால் தேகத்திற்குக் கெடுதலென்பது இவர்கட்கும் ஸமானமே. மற்றும் இவர்களுக்கேற்படும் பாதகத்தை கவனியுங்கள் இவர்களெல்லோரும் தனவந்தர்கள். இவர்களின் வீட்டு வாயலில் பால்காரன் மாட்டை அதிகாலையில் ஓட்டிவந்து முன் நிறுத்தி சுத்தமாய்க்கறந்து கொடுக்கிறான் அம்மட்டில் சுத்தம்

தான் மற்று இதன் அனியாயத்தைச்சற்றுஊன்றி கவனியுங்கள் காலையில் மாட்டுக்காரன் அம்மாடுகளைக் கட்டுத்துறையினின்றும் அவிழ்த்து அதன் முதுகில் கம்பிபோன்ற கயறால் கொடுக்கும் அடிகளால் அது உயிரைப்பிடித்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கிறது அதன் கன்றுகள் 4 5ஐ ஒன்ருய்ச்சேர்த்து இழுத்துவரும் பரிதாபத்தைக் கவனித்துப் பார்த்தால் கல்மனமும் உருகும். கன்றுகளோ நெடுமயிருபற்றி இப்போது யமலோகம் போகுமோ அடுத்த நிமிஷமோவென்றிருக்கும். அது தாயின் பாலை உருசி பார்த்து நெஞ்சுநனையவாவது குடித்திராது. இதுமதுரைபோன்ற சில நகரங்களின் காக்ஷி. அறிஞர்களும் லோகத்தைத்தூக்குவதில் ஸாமர்த்தியம் பெற்ற லோகோபகாரிகள் நிறைந்த சென்னைமா நகரிலோ சொல்லத்திறமுண்டோ மாடுகளுக்கு அவிடம் கன்றே இடையாது செத்தகன்றை நிற்பதுபோல் பாவையாக்கி தூக்கிக் கொண்டு மாட்டு முன்னிலையில் நிறுத்திப்பாலை உருவிவிடுவான் ஐயோ இம்மாதிரி கோஹத்தி யாரால் ஏற்படுகிறதென்பதைச் சற்று கவனித்துப்பாருங்கள் சித்திரவதையாற் கொலைசெய்யும் இவ்வுபகாரிகள், யாரோமாட்டை அடிக்கிறனும் அவனிடம் சண்டைபோட்டு அவனுக்குத் தர்மோபதேசம் செய்யப்போகிருர்கள். அவன் திருப்பிக்கேட்டால் யாதுபதிலளிப்பார்கள். இவ்வுபகாரிகள் இதைக்கண்ணுல் பார்ப்பதற்குமுன் அதிகாலையிலேயே கறந்து வைத்துவிட்டுப் போய்விடுகிறுன். பிரபுக்கள் 8-மணிக்குத்தான் எழுந்திருப்பார்கள். உடனே குடிதயாராய் இருக்கும் அல்லாவிடில் வீடுபடும்பாடு சொல்லமுடியுமோ இவர்கள் லோகோபகாரிகள் புலி புதரில் தூங்கி எழுந்து கொட்டாவி விட்டுக்கொண்டு உடனே பசுவையோ மானையோ அடித்துத்தீர வேண்டும் இல்லாவிடில் கோபம் பற்றிக்கொள்ளுமாம். அதற்கும் இதற்கும் பேதம் உண்டோ. இது இருக்கட்டும் காசுக்கு ஆசைப் பட்டுக் கன்றைக்கொன்றபிகு கறக்கும்பாலை அருந்துபவன் பாபத்தை தர்மசாஸ்திரக்காரரைக்கேளுங்கள். எப்போதும் உழவில் கட்டிவருந்தும் காளைமாடுகளைப்பார்த்து காமதேனு கண்ணீர் விட்டழுகிறதென்று நம் பிராசீன புராணம் கூறுகிறது. நமதுபிரபுக்கள் காலை ஆகாரத்திற்காக பலமாடுகள் தடிப்புகள் எற்படக் கயிற்றுப்பூசை வாங்கிக்கொண்டு குதிரைஒட்டத்தால் ஒடி ப்ரபு வாயலில் வந்துநின்றதும் பால்காமபு பீவிட்டுப் பிளந்துபோம் படி அரைநிமிஷத்தில் பாலைவற்ற இழுக்கும் வேதனையைப் பொருத்துக்கொண்டு நின்றுவிட்டுத்திரும்பிவரும்போது பார்த்து

வீட்டுக்காமதேனு அடையும் சந்தோஷமும் நமக்கு அதனாலேற்படும் அனுக்கிரகமும் சொல்லித்திருமோ.

இவ்விதமே நாம் அனுஷ்டித்து வந்தால் கோக்களின் வம்சம் ஒரு காலத்தில் பாழாய் விடலாம். பார்ப்பானும் அக்காலத்திற்குள் துலைந்து விடுவான். அதன் பிறகு வாழ்கவந்தணர் வானவர் ஆனினம் என்ற சம்பந்தர் பாடலும்.

गोब्राह्मणेभ्यश्शुभमस्तुनित्यं கோப்ராஹ்மணேப்யஶ்ஶுபமஸ்துநித்யம் என்ற சுலோகமும் அடிபட்டு விடும். இப்புலப்பம் வேண்டாம் அதிகச் செலவுண்டோ இல்லையோவென்பதையும் இதனால் எத்துணை குடும்தங்கள் பாழாகின்றனவென்பதையும் கவனியுங்கள். நம்முள் நடக்கும் ஏழைகள் கல்யாணம் முதல் பணக்காரவீட்டுக் கல்யாணம் வரை கவனித்தால் இக்குடி ஒன்றால் அந்த கிருகஸ்தன் கடனாளியாகிறான். கல்யாண வீட்டில் அல்லும் பகலும் காபி கடைசியில் கணக்கில் காபிக்கொட்டைக்கும் பாலுக்கும் கொடுக்கும் காசுதான் அதிகம். இக்குடியை நிறுத்தினால் தான் உலகத்திற்கு க்ஷேமமென்பதைச்சற்று ஊன்றிப்பாருங்கள். காலையில் ஆகாரம் துலைந்தால் ஏராளமான பால் மிஞ்சும். கோவம்சம் வளரும் உழவிற்குத் தக்க காளை மாடுகள் சுலபமாய் கிடைக்கும் தயிரும் நெய்யும் சுத்தமாயும் மலிவாயும் கிடைக்கும். அதனால் தேகபுஷ்டியும் தீர்க்காயுளும் ரோகமின்மையும் சித்திக்கும். பிராமணனுக்கு ஆசாரம் மேம்படும். மற்றய ஜாதியாரோடு விரோதமேற்படாது. தேவதானுக்கிரகம் ஸித்திக்கும். இன்னும் எவ்வளவோ அளவிலாச் சுகம் பெறலாம். ஆகையால் அறிஞர்களே கடைசியாய் இதைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

காபிக்குடியை அறவே ஒழியுங்கள். பரதேச சாமானை வாங்க வேண்டாமென்று உபதேசம் செய்துவொண்டு திரியும் நீங்கள் காபியும் டீயும் கொக்கோவும் ஒவல்டின்னும் இன்னும் எத்துணையோ ஆபாஸப் பெயர்களுள்ளவைகளைக் குடிப்பது அழகா. இவை பரதேச சாமானல்லவோ இவைகளை உத்பத்தி செய்தவர்கள் நம் முன்னோர்களா. இதை நீங்கள் ஆலோசனை செய்து நிறுத்தாமல் பேதைகளை ஏமாற்ற முன் வந்து நிற்பது பரிகாசத்திற்கிடமாகும். ஆகவே உண்மையாய் நீங்கள் உங்கள் பெருங் குடியை ஒழிக்க முன் வாருங்கள்.

சுபம்!

M. N. சுப்ரம்மண்ய சாஸ்திரி.

பொன்மலையிலுள்ள ஆஸ்திக மகாஜனங்களின் ஆதரவின் கீழ் குருவாரந்தோறும் பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் நடத்திக்கொண்டு வரப்படுகிற

## ஸ்ரீபகவத்கீதா உபன்னியாஸத்தின் சுருக்கம்.

### ஆறுவது அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறுகின்றார்—

சங்கல்பத்தினால் உண்டாகிற சகலவிஷய ஆசைகளை முற்றிலும் மனதினாலே எல்லா இந்திரியங்களையும் சகலவிஷயங்களினின்றும் திருப்பி, தைரியத்தினால் சுவாதீனம் செய்துகொள்ளப்பட்ட புத்தியோடு மனதை ஆத்மாவினிடத்தில் நிறுத்தவேண்டும். எத்தனையோ மனோநிரோதம் செய்தும் பலமாகிய பிரம்ம சாக்ஷாத்காரம் ஏற்படவில்லையே என்று அதைரியப்பட்டு யோகத்தை விட்டுவிடக்கூடாது. பலம் கைகூடியே வரும் என்ற திடப்பிரக்ஞையுடன் பிரம்மத்தைத் தவிர வேறொன்றையும் சிந்திக்காமலிருக்கவேண்டியது. நிலையற்றதும் சஞ்சல சுபாவமுள்ளதுமான மனதை விக்ஷேப விஷயங்களினின்றும், தமோகுணமாகிய தூக்கத்தினின்றும் திருப்பி இழுத்துத் தனதான்ம ஸ்வரூபத்திற்றானே நிற்கும்படி செய்யவேண்டியது. மனது ரஜோகுணவிருத்தியால் உலக விஷயங்களில் செல்லவிடாமல் தடுக்கப்பட்டால் தமோகுணமாகிய காடாந்தகாரத் தூக்கத்தின்கண் சென்றுவிடும். அதற்கும் இடங்கொடுக்காது ஸத்வகுணப்பிரதானத்தால் பிரம்மத்தையே சிந்தனை செய்யவேண்டியது. இப்படி அனுசந்தானம் செய்த ரஜோகுண தமோகுண நிவிருத்தியுடைய யோகிக்கு நிரதிசய சுகப் பிராப்தி ஏற்படுகிறது என்பதில் சந்தேஹமில்லை. மேற்சொன்னவிதமாய் மனதைப் பரப்பிரம்மத்தில் யோகி யாதொரு பிரயாசையுமின்றி பிரம்மதரிசனமாகிற சிரேஷ்டமான சுகத்தையனுபவிக்கிறான். யோகம் பொருந்திய மனதுடையோன் சமபுத்தியுடையவனா (ஆத்மா ஒன்றே என்பதா)ய் உலகத்திலுள்ள சகல வஸ்துக்களில் தன்னையும் தன்னிடத்தில் சகலவஸ்துக்களுமிருக்கிறதாகவும் பார்க்கிறான். அதாவது சகல வஸ்துக்களிலும் தன் ஆன்மாவின் நானாவகைகளைப் பார்க்கிறான், ஆன்ம ஞானமில்லாத அஞ்ஞானிதனதான்ம வடிவமாயிருக்கும் பரமேசுவரனைப் பார்ப்பதில்லை. ஆனால் தனது தேகேந்திரியாதி

னைத் தானுகப் பார்க்கிறான். இதனால் பரமேசுவரனுகியநானும் அவ்வஞ்ஞானியைப் பார்ப்பதில்லை. அதாவது பிறப்பிறப்பு எனும் சம்சாரத்தினின்று அவனை இரக்ஷிப்பதில்லையென்று சுருதியிலும் கூறப்பட்டிருக்கிறது. எவன் சகலவஸ்துக்களிடத்திலும் பரமாத்மாவாகிய என்னையும் என்னிடத்தில் சகல வஸ்துக்களையும் பார்க்கிறானே அவனுக்கு நான் காணுமல் போகிறதில்லை. எனக்கு அவனும் காணுமல் போகிறதில்லை. அதாவது நானே அவன் அவனுகி விடுகிறேனென்று தாத்பர்யம். எந்தயோகி சர்வபூதத்திலுள்ள என்னைத் தன்னோடு ஒன்றுக அபரோக்ஷம் செய்கிருனே அவன்பலவாருக எந்தமார்க்கத்தில் பிரவிருத்தித்திருந்த போதிலும் என்னிடத்திலேயே அபேதமாகவிருக்கிறான். விதி நிஷேதங்கள் அவனைக் கட்டுப்படுத்தா. அதாவது எந்தக் காரியம் அவன் செய்தாலும் அதன் புண்ணியபாபபலனை அனுபவிக்க மாட்டான் கெட்டகாரியம் செய்தாலும் பாபம் அவனை அணுகாது என்பது ஞானத்தை ஸ்துதி செய்வதற்கேயன்றி வேறல்ல. இதைச் சற்று விசாரிப்போம். யாரிடத்திலும் விருப்பு வெறுப்பு இல்லாதவன் எந்த சுகத்திலும் மேலான சுகத்தையனுபவிக்கிறவன் எல்லாவற்றையும் தானுகப் பார்ப்பவனுகிய ஒருவனுக்கு துஷ்கிருத்தியம் செய்யவேண்டும்என்கிற எண்ணம் எப்படி உதிக்கும்? நிச்சயமாக உதிக்காது. ஒ அர்ச்சுனு! எல்லாப் பிராணிகளுக்கும் துக்கத்தை நீக்கி சுகத்தைக்கொடுப்பதற்காகத் தத்வோபதேசம் செய்து தன்னைப்போல ஆக்குவதற்கு எவன் பிரயாசைப்படுகிருனே அதாவது எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கிருனே அவன் சிரேஷ்டமான யோகியாகிறான்.

அர்ச்சுனனின் ஆசங்கை நீர் சமத் தன்மையாற்கூறிய யோகத்தின் ஸ்திரநிலையை மனதின் அதிசஞ்சலத் தன்மையால் நான் பார்க்கிறேனில்லை. அதாவது மனவமைதியின்மையால் எவ்வஸ்துக்களிலும் பரமாத்ம ஸ்வரூபத்தைப் பார்க்கிறதில்லை. அல்லது பார்த்தாலும் அவ்வனுபவம் ஸ்திரமாயுமிருப்பதில்லை. பிரசித்தமான சஞ்சலமும், பிரமாதியும், பலவானும், திடமுமுடைய இம்மனிதன் நிக்கிரகத்தை ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வாயுவைக் கையுள் அடக்குவது போல் மிக்கக் கடினமானதென்றெண்ணுகிறேன்.

பகவானின் பதில். மஹாபாஹோ! இம்மனம் அடக்க அரிதென்பதும், சஞ்சலமானதென்பதும் உண்மையாயினும் அப்பியாச

வைராக்கியங்களால் நிக்கிரகம் செய்யக்கூடும். எப்படியென்றால் மனதை இந்திரியங்களின் துவாரா விஷயங்களில் தோஷதிருஷ்டியாலும் வைராக்கியத்தாலும் செல்லவொட்டாது. தன்னை ஆராய்வதிலேயே அடிக்கடியப்பியாஸத்தில் திருப்பி நிக்கிரகிக்க வேண்டும். எப்படி வெள்ளத்தையணைபோட்டுத் திருப்புகிறானோ அப்படி மனதை வைராக்கியமாகிற அணையால் விஷயங்களில் செல்லவிடாமல் திருப்பி அப்பியாசமென்கிற வாய்க்காலின் வழியாக மனது எனும் நதியை ஆத்மஸ்வரூபம் எனும் வயலில் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். வாஸிஷ்டத்தில் மனதையடக்க நான்கு வித உபாயம் கூறப்பட்டிருக்கிறது. 1. அத்யாத்மவித்தை அதாவது பிர்ம்மம் சத்தியம் உலகம் மித்தை என்பதை சாஸ்திர மூலமாக அடிக்கடி பலவாறாக விசாரித்து மித்தையாகிய உலக விஷயத்தில் மனதைச் சொல்லவொட்டாது தடுத்தல். 2. சாது சங்கம் அத்யாத்ம வித்தை எவன் மனத்தினால் பூரா வும் கிரஹிக்க முடியவில்லை. சிற்சில விஷயங்களைக்கிரகித்தாலும் பிறகு மறந்து விடுகிறதேயென்றால் சாதுசங்கத்தை நாடவேண்டும். அதை நாடுவதால் சாதுக்கள் நமக்குத் தத்துவத்தை யடிக்கடி போதிப்பார்கள். அதினால் நமது மனம் வசப்படும். 3 வாசனா பரித்தியாகம் லோகவாசனை—உலகத்தில் எல்லாரும் தன்னை நிந்திக்காமலிருக்க வேண்டும், சர்வதா தன்னையே ஸ்தோத்திரம் பண்ணவேண்டுமென்று அபிமானபூர்வகமாய் பிரயாசைப் படுதல் தேகவாசனை— ஆயுசுஆரோக்கியம், அழகு, இச்சரீரத்திற்கு சம்பாதிக்கவேண்டுமென்று முயற்சி செய்தல, சாஸ்திரவாசனை—சாஸ்திரப்பாடம் படிக்வேண்டுமென்ற ஆசையால் அனேகபுஸ்தகங்களை வாங்கிச் சேர்த்து வைப்பதில் பிரயத்தனம் செய்கிறது முதலியனவாகிய வாசனாத்திரயங்களில் மனதைச்செல்ல ஒட்டாது தெய்வ வாசனையையே விருத்தி செய்யவேண்டுமென்பது.

பிராணாயாமம் பிராணாயாமம் செய்துகிரமமாக மனதையடக்கிக் கொள்ளலாம். அதாவது மனதுஎன்கிற விருக்ஷத்திற்கு இரண்டு வித்துக்கள் பூர்வஜன்ம வாசனை என்றும் பிராணசலன மென்றும் சொல்லப்படும். அதில் ஒரு வித்து அழிந்தாலும் மனதென்கிற விருக்ஷம் அழிந்துவிடுகிறது. ஆதலால் வாசனையை விடுவதும் பிராணனைத்தகைவதும் மனோநிக்கிரகத்திற்குச்சாதனமாகும்இவ்விதம் நான்கு உபாயங்களிருக்க இவைகளை விட்டு

ஹடாத்காரமாக மனதையடக்க முயற்சி செய்பவர்கள், தீபத்தை விட்டு மையினுல் இருட்டை நிவர்த்தி செய்ய முயற்சிக்கின்றவர்கள் ஆவார்கள். மஹாபாஹோ என்று சம்போதனம் செய்தது மஹாதேவனுடன் சண்டை போட்டவனுக்கு மனதையடக்க முடியவில்லையா என்று பரிகசிப்பது போலும், அல்லது அப்பேர்ப் பட்டவனுக்கு இது முடியும் என்பதில் என்ன சந்தேகம் என்ற நிச்சயத்தை காண்பிப்பது போலுமிருக்கிறது.

வாக் பூமி, மனோ பூமி, அஹங்கார பூமி, மஹத்தத்வமெனும் இந்த நான்குபடிகளில் அப்பியாசம் செய்யாதவனுக்கு மனோ நிக்கிரகம் சாத்தியமன்று. மேற்சொன்ன பூமிகளைக் கிரமமாக அப்பியசிப்பவனுக்கு மனோ நிக்கிரகம் சுலபமாகும் என்பது என்னுடைய மதம். இந்தப்பூமிகைகளின் விவரம் மற்றொரு சந்தர்ப்பத்தில் விவகரிக்கப்படும்.

(இன்னும் வரும்)

வி. ராமநாதன்,
பொன்மலை.

---

# மதிப்புரை,

**ஆஸ்திக்கியம் என்றால் என்ன?**

T. K. ராமபத்ரசர்மா அவர்களால் எழுதப்பட்டு அனுப்பப் பட்ட இப்பெயர் வாய்ந்த இருஸஞ்சிகைகளை வரப்பெற்றோம்.

இவை தர்மராஜ்யமென்று மிகவும் பிரசித்திபெற்று விளங்கும் திருவனந்த புரத்தில் பத்மவிலாசத்தில் தற்காலம் லோக க்ஷேமத்தைக்கருதி ஆங்காங்கு விஜய யாத்திரை செய்து பக்தர்களுக்கு அனுக்கிரகம் புரிந்துவரும் ஸ்ரீ சிங்கேரி ஜகக்குரு ஸ்ரீ பரமஹம்ஸ பரிவிராஜகாசார்யவர்ய ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளவர்களால் அனுக்கிரகம் செய்யப்பட்ட அறிய உபந்யாசங்கள்.

பண்டிதர்களில் சிலரைத்தவிர பெரும்பாலும் உலகிலுள்ள ஜனங்கள் யாவரும் ஸம்ஸாரமெனப் பெயர் வாய்ந்த இக்

கொடியபிணியை அடியோடகற்றி என்றுமழிவில்லாதபரமாத்ம ஸ்வரூபானந்தத்தைப் பெற்று சுகித்திருக்கவேண்டி அவசியம் அறியவேண்டிய ஆத்மா அநாத்மா என்கிற இவ்விருவஸ்துக் களுடைய உண்மையான ஸ்வரூபத்தைச் சற்றுமறியாமல் அநாத்மாவான மாம்ஸம், ரக்தம், எலும்பு முதலிய அசுத்த பதார்த்தங்களால் நிரம்பிய பாஞ்ச பௌதிகமான இந்த உடலையும், இந்திரியம், மனம், பிராணன் முதலானவைகளையும் ஆத்மாவாகக் கருதி உண்மையான ஆத்மஸ்வரூபத்தை அநாத்மாவாக நினைத்து அவரவர்களின் கொள்கையை ஸ்தாபிக்கவேண்டிப்பலவாறுன துர்வாதங்களையும் கூறிக்கொண்டு முற்பிறவியிற் செய்த பெரும் புண்ணியத்தின் பயனாய்த் தோன்றிய இம்மானிட பிறவியை வீண் பண்ணுகிறார்கள். அவ்விதமில்லாமல் உண்மையான ஆத்மஸ்வரூபத்தையறிவித்துப் பிறவிப்பயனை பெறும்படி செய்யவேண்டுமென்று கருணைகொண்ட ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் ஒவ்வொருவராலும் கூறம்படும் ஸ்தூலசரீரம் முதலுள்ள அநாத்ம பதார்த்தங்களை ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டி முறையே அவைகளிலுள்ள தோஷங்களையும் நிரூபித்து லௌகிகமானப்பிரஸித்த திருஷ்டாந்தங்களாலும் இவைகள் அநாத்மாவென்பதை ஸ்பஷ்டமாய் விளக்கிக்காட்டி அக்ஞானிகளும் உண்மையான ஆத்மஸ்வரூபத்தை அறியும்படி இந்த உபன்யாஸங்களால் அனுக்கிரகித்திருக்கிறார்கள். பின்னும் அந்தணர்களுக்கு ஆத்மஞானம் அவசியம், விவேகம் எவ்வாறு உண்டாவது, சுகமும் சுகஸாதனமும், ஆத்மாவை திருடுதல் என்ற பதத்தின் கருத்து, என்கிற விஷயங்களும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வரிய விஷயங்களை யாவரும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். லோகோபகாரத்தின் பொருட்டு புஸ்தகரூபமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

இதன் விலை ரூ. 0—3—0

ஏ. கிருஷ்ணய்யர்
கிருஷ்ணவிலாஸ பிரஸ்,
திருவனந்தபுரம்.